TAMILTH	Coimbatore	1	Regional_02	M. ALBERT	213809	50415

பிஏபி அணைகளின் நீர்மட்டம்

சோலையாறு அணை (165 அடி)	பரம்பிக்குளம் அணை (72 அடி)	ஆழியாறு அணை (120 அடி)	திருமூர்த்தி அணை (60 அடி)
நீர்மட்டம் .....45.65 அடி	நீர்மட்டம் ..... 49.72 அடி	நீர்மட்டம் .....65.95 அடி	நீர்மட்டம் .....42.54 அடி
நீர்வரத்து .....119.76 கனஅடி	நீர்வரத்து .....127 கனஅடி	நீர்வரத்து .....201 கனஅடி	நீர்வரத்து .....875 கனஅடி
வெளியேற்றம்:20 கனஅடி	வெளியேற்றம் ...1215 கனஅடி	வெளியேற்றம் ....156 கனஅடி	வெளியேற்றம் ...1139 கனஅடி

ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் உள்ள

தாடகை நாச்சியம்மன் கோயிலுக்கு செல்ல வனத்துறை தடை

யானைகள் நடமாட்டம் இல்லாவிட்டால் உள்ளூர் மக்களுக்கு மட்டும் அனுமதி என அறிவிப்பு

■ பொள்ளாச்சி

ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் உள்ள தாடகை நாச்சியம்மன் கோயில் பகுதியில் யானைகள் நடமாட்டம் இருப்பதால், கார்த்திகை தீபத்தன்று தீபம் ஏற்றி வழிபட வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். யானைகள் நடமாட்டம் இல்லையெனில் உள்ளூர் மக்களுக்கு மட்டும் வழிபட அனுமதி அளிக்கப்படும் என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் உள்ள தாடகை நாச்சியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் கார்த்திகை தீபத்தன்று பக்தர்கள் சென்று, அங்குள்ள கம்பத்து மேடு பகுதியில் மகா தீபம் ஏற்றி வழிபடுவது வழக்கம். இந்த ஆண்டு கோயில் பகுதியில் யானைகள் நடமாட்டம் இருப்பதாகக் கூறி, வனத்துறையினர் வழிபாட்டுக்குத் தடை விதித்துள்ளனர்.

இதற்கு இந்து முன்னணி உள்ளிட்ட அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. வழிபாட்டுக்கு அனுமதி அளிக்க வலியுறுத்தி பொள்ளாச்சி சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமியிடம் நேற்று மனு அளித்தனர்.

இதுகுறித்து இந்து அமைப்புகளின் நிர்வாகிகள் கூறும்போது, "கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2,000 அடி உயரத்தில் உள்ள தாடகை நாச்சியம்மன் கோயிலுக்குச் செல்ல ஆண்டுக்கு ஒருமுறை, கார்த்திகை தீபத்தன்று மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. பல தலைமுறைகளாக அங்கு மகா தீபம் ஏற்றி வழிபட்டு வருகிறோம்.

இந்நிலையில், வழிபாட்டு உரிமையைப் பாதிக்கும் வகையில் வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இதனை நீக்க வேண்டும்" என்றனர்.

பொள்ளாச்சி வனச்சரக அலுவலர் அப்துல்லா கூறும்போது, "கோயில் அமைந்துள்ள வனப்பகுதியில் குட்டிகளுடன் யானைகள் அதிக அளவில் நடமாடுவதாக வனப் பணியாளர்கள் ரோந்துப் பணியின்போது தெரிவித்தனர்.

இதனால், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அனுமதி மறுக்கப்பட்டது. இன்று காலை வனத்துறையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டு யானைகள் நடமாட்டத்தைக் கண்காணிப்பார்கள். அப்போது யானைகள் நடமாட்டம் இல்லையெனில் உள்ளூர் மக்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

யானைகள் நடமாட்டம் இருந்தால் அனுமதி வழங்கப்படாது" என்றார்.

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தாடகை நாச்சியம்மன், கோபால்சாமி கோயில்களுக்குச் சென்று கார்த்திகை தீபம் ஏற்றி வழிபட உள்ளூர் கிராம மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதாக கோவை மாவட்ட அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஐல்லிப்பட்டி கிராம மக்கள் 'குந்துருத்தி தடம்' வழியாகவும், அர்த்தநாரிபாளையம் கிராம மக்கள் 'நுதிப்பள்ளத் தடம்' வழியாகவும், பருத்தியூர் கிராம மக்கள் நல்லாறு காப்புக் காட்டு வழித்தடம் வழியாகவும் செல்ல அனுமதி உள்ளது.



தாடகை நாச்சியம்மன் கோயிலுக்கு செல்ல தடை விதித்து வனத்துறையினர் வைத்துள்ள அறிவிப்பு.



தாடகை நாச்சியம்மன். (கோப்பு படம்)

கோவை-தூத்துக்குடி ரயிலை இயக்க வலியுறுத்தல்

■ கோவை

சிட்டிசன்ஸ் வாய்ஸ் கோயம்புத்தூர் மற்றும் தெற்கு ரயில்வே பயணிகள் கூட்டமைப்பு சார்பில் சேலம் கோட்ட மேலாளர் பண்ணாலாலுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: கோவை- மயிலாடுதுறை ஜனசதாப்தி ரயிலை 6 மாத காலத்துக்கு சோதனை அடிப்படையில் சிதம்பரம் வரை நீட்டிக்க வேண்டும். இதனால், நடராஜர் கோயில், பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகள், சீர்காழி போன்ற ஊர்களுக்கும் எளிதில் ரயில் போக்குவரத்து வசதி கிடைக்கும்.

அகல ரயில் பாதை பணியின் போது நிறுத்தப்பட்ட கோவை - ராமேஸ்வரம், கோவை- தூத்துக்குடி ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க வேண்டும். 30 ஆண்டுகளுக்கு மேலாக தீர்வு காணப்படாமல் இருக்கும் கோவை- பெங்களூரு, மைசூரு நேரடி இரவு நேர ரயில் சேவையை தொடங்க வேண்டும். வந்தே பாரத் உள்ளிட்ட நவீன ரயில்களின் அறிமுகம் வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த ரயிலில் வழங்கப்படும் உணவின் தரம் பயணிகள் எதிர்பார்க்கும் தரத்தில் இருப்பதில்லை.

நவீனமயமாக்கல் என்பது வேகம், தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு ஆகியவற்றுடன் மட்டுமின்றி, உணவு உள்ளிட்ட அனைத்து சேவைகளின் தரத்திலும் பிரதிபலிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்,
எண்.82, அண்ணாசாலை, கீண்டி, சென்னை - 32

இ-ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

இ-ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை எண்: 06 / 2026-27 **நாள் : 18-11-2026**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு உட்பட்ட நாஞ்சிக்கோட்டை சேமிப்புக் கிடங்கு வளாகத்தில், தற்போது சேதமடைந்துள்ள அலுவலகக் கட்டிடத்தைப் இடித்துத் அப்புறப்படுத்துதல்; மற்றும் புதிய அலுவலகக் கட்டிடம் மற்றும் பாதுகாவலர் அறை ஆகியவற்றைக் கட்டுதல்; மின் வசதிகளை அமைத்தல்; சிமெண்ட் கான்கிரீட் சாலையைப் புதுப்பித்தல்; மற்றும் நல்லம்பள்ளி சேமிப்பு கிடங்கு வளாகத்தில் கிடங்கு எண் 1 முதல் 3 வரை உள்ள கிடங்குகளுக்கு சிறப்பு பழுது பார்த்தல், சாலைகள் பழுது பார்த்தல் மற்றும் தீத்தடுப்பு தண்ணீர் தொட்டி கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கான இ-ஒப்பந்தபுள்ளி 11-12-2026 அன்று மாலை 5.00 மணி வரை கடைசிநாளாகக் கொண்டு இணையவழி வாயிலாக வரவேற்கப்படுகின்றன. விரிவான விதிமுறைகள், நிபந்தனைகள், பிணைவைப்புத்தொகை, வேலையின் விவரம். ஒப்பந்தபுள்ளிகள் பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாள், தொழில்நுட்ப ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படவுள்ள நாள் போன்ற விவரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3720 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **செயற்பொறியாளர், தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனம், சென்னை**

தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்) (AN ISO 9001 - 2015 CERTIFIED COMPANY)
தெற்கு சரகம், எண்.1 ஆய்வாளர் குடியிருப்பு, த. தி. கா 6வது அணி வளாகம், புது நத்தம் சாலை, மதுரை-625 014
மின் அஞ்சல் : sescmdutnphcl@gmail.com தொலைபேசி எண் : 0452 -2903019

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 27/2026-2027 **நாள் : 20.11.2026**

வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (இலட்சத்தில்) (2025-2026)
1) மதுரை மாநகரம் **தமிழ்நாடு சிறப்புக் காவல் 6வது படைப்பிரிவு அணி வளாகத்தில்** உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் கழிவுநீர் வடிகால் குழாய்கள் மற்றும் கழிவு நீர் ஆய்வு தொட்டிகளை புதுப்பிக்கும் பணி	ரூ. 110.16 + GST @ 18%
2) திருச்சி மாநகரம் **திருச்சி மாநகர ஆயுதப்படை வளாகத்தில்** (கே. கே. நகர்) புதிய கழிவுநீர் வடிகால் குழாய் மற்றும் ஆளிறங்கு ஆய்வு குழி அமைத்தல்	ரூ. 106.50 + GST @ 18%
3) திருச்சி மாவட்டம் **திருவெறும்பூரில்** 2 ஆய்வாளர், 4 சார்பு ஆய்வாளர் மற்றும் 88 காவலர்/தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகளுக்கு பழைய கழிவுநீர் வடிகால் குழாய் மராமத்து வேலைகள் மற்றும் புதிய கழிவுநீர் தொட்டி (Septic Tank) உடன் ஆளிறங்கு ஆய்வு குழி அமைத்தல்	ரூ. 55.05 + GST @ 18%

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு **https://tntenders.gov.in** அணுகவும்
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாளும் மற்றும் நேரமும் : **12.01.2027** நண்பகல் **12.00** மணி முதல் **27.01.2027** மாலை **06.00** மணி வரை
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **29.01.2027** காலை **11.15** மணிக்கு
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை **www.tnphc.com & www.tnpolice.gov.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்

செ.ம.தொ.இ./3710/ஒப்பந்தப்புள்ளி/2026 **கண்காணிப்புப் பொறியாளர், தெற்கு சரகம் /த.நா.கா.வீ.வ.க**

வரி விளம்பரங்கள்
பொது
விற்பனை



பொது
பொது அறிவிப்பு

பொள்ளாச்சியிலிருந்து ஆந்திராவுக்கு அனுப்பிய 11.46 டன் தேங்காய்களை ஏமாற்றி விற்ற லாரி ஓட்டுநர் கைது

■ பொள்ளாச்சி

பொள்ளாச்சியில் இருந்து ஆந்திராவுக்கு அனுப்பப்பட்ட ரூ.6.28 லட்சம் மதிப்பிலான 11.46 டன் தேங்காயை விற்பனை செய்து மோசடியில் ஈடுபட்ட லாரி ஓட்டுநரை போலீஸார் கைது செய்தனர்.

பொள்ளாச்சி சிங்காநல்லூரைச் சேர்ந்தவர் தேங்காய் வியாபாரி நந்தகுமார் (37). இவர் வடக்கிப்பாளையத்தில் உள்ள வேலுச்சாமி என்பவரிடம் இருந்து 11,460 கிலோ தேங்காயை கொள்முதல் செய்தார். இவற்றை பொள்ளாச்சி ராஜாமில் சாலையில் உள்ள லாரி முன் பதிவு அலுவலகம் வாயிலாக, கடந்த 7-ம் தேதி ஆந்திர மாநிலம் ராயச்சோட்டியில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு அனுப்பி வைத்தார். லாரியை ஆந்திர மாநிலம் கர்னூலைச் சேர்ந்த கனல நாகன்னா ஓட்டிச் சென்றார்.

இந்நிலையில், 15 நாட்களுக்கு மேலாகியும் தேங்காய் வந்து சேரவில்லை என அந்நிறுவனத்தினர் நந்தகுமாரிடம் தெரிவித்தனர். ஓட்டுநர் கனல நாகன்னாவைத் தொடர்பு கொள்ள முயன்றபோது அவரது செல்போன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, ரூ.6.28 லட்சம் மதிப்பிலான 11.46 டன் தேங்காயை ஓட்டுநர் மோசடி செய்து எடுத்துச் சென்றதாக நந்தகுமார் வடக்கிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதையடுத்து, போலீஸார் வழக்குப் பதிந்து நடத்திய விசாரணையில், அந்தத் தேங்காயை கனல நாகன்னா ஆந்திராவில் வேறொரு கடையில் விற்பனை செய்தது தெரியவந்தது. தொடர்ந்து, ஆந்திரா சென்ற தனிப்படை போலீஸார், தலைமறைவாக இருந்த கனல நாகன்னாவைக் கைது செய்து லாரியைப் பறிமுதல் செய்தனர். பின்னர், பொள்ளாச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 2-ல் ஆஜர்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

வரி விளம்பரங்கள்
பொது
பொது அறிவிப்பு

மேன்மை தாங்கிய சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
I.P. No. 03 of 2025
1. S.சித்திரைகுமார்
2. C.கரையரசி - மனுதாரர்/ நொடிப்பு நிலையாளர்கள்
- எதிர் -
2. சின்னசாமி, 3/89, சின்னமலை வீதி, கோட்டை காடு, செம்மேடு போஸ்ட், கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம். செல்: 91590 87328.
6. S.தீபாலட்சுமி, W/o.செந்தில், சின்னமலை வீதி, கோட்டை காடு, செம்மேடு போஸ்ட், கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம். செல்: 73735 44518.
9. K.N.நாராயணன், உரிமையாளர் ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், 419/2A2, Sonayaanpalayam, கல்பனாநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் - 641 108. செல்: 80451 66245.
14. கிளை மேலாளர் அவர்கள் கிராம சக்தி, வடவல்லி கிளை, 1A1, மைதிலி காம்ப்ளக்ஸ் முதல் மாடி, கோபாலபுரம், இடையர்பாளையம் ரோடு, கோயம்புத்தூர் - 641 041.
19. ராஜ்குமார், உரிமையாளர் : K.R.S.திருநிறை செல்வி பைனான்ஸ், 39, வெள்ளக்கிணர் பிரிவு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர். செல் : 94455 81515.
20. கிளை மேலாளர் அவர்கள், Airtel Money Loan, 17, குளத்துப்பாளையம் பஞ்சாயத்து, தளியூர், தொண்டாமுத்தூர், கோயம்புத்தூர் - 641 109.
21. குப்பண்ணசாமி, உரிமையாளர் குப்பண்ணா பைனான்ஸ், 58, புலவன்பட்டி ரோடு, காவல் நிலையம் அருகில், தொண்டாமுத்தூர் கிளை, கோயம்புத்தூர் - 641 109.
- 2, 6, 9, 14, 19, 20 & 21 எதிர்மனுதாரர்கள்

மேற்படி மனுதாரர் / நொடிப்பு நிலையாளர்கள் பக்கம் அறிவிப்பு

சமூகம் கோர்ட்டில் பிரதான அசல் மனுவில் மனுதாரர்களை நொடிப்பு நிலையாளர்கள் என தீர்மானித்து பிரகடனம் செய்ய கோரிய அசல் மனுவில், ஷை 2, 6, 9, 14, 19, 20 & 21 எதிர்மனு தாரர்கள் தரப்பு ஆட்சேபணை தெரிவிக்க வருகிற 21.01.2027 அன்று வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில், ஷை நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்குள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஷை 2, 6, 9, 14, 19, 20 & 21 எதிர்மனுதாரர்கள் ஆஜராக வேண்டும். தவறினால் ஷை Ad-Interim Protection Order மனுவில் ஷை 2, 6, 9, 14, 19, 20 & 21 எதிர்மனுதாரர்களை பொறுத்து ஒருதலைபட்சமாக (Exparte) தீர்மானிக்கப்படும் என இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

/ நீதிமன்ற உத்தரவுப்படி /
L.PRABAHAR, B.Com.,L.L.B.,
B.DHANAPALSINGH, B.A.,B.L.,
Advocates, 88-1,Soundharapandian Street, Kovilpatti - 628 501, Thoothukudi Dist.
Cell : 98658 72522.

இந்து தமிழ் திசை

பொறுப்புத் துறப்பு: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செய்யப்படுபவை, அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சொத்து வசூல் நிர்வாக கிளை
மூன்றாவது தளம், மத்திய அலுவலக வளாகம், 763, அண்ணா சாலை, சென்னை-600 002,
Ph: 044-2851 9453 Email: iob1535@iob.bank.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்கள மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வமான கவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோர்களிடமிருந்து** இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சொத்து வசூல் நிர்வாக கிளைக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகைகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **10.12.2026** அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: கடன்தாரர்கள் பெயர்: 1.M/s Expovan Pvt Ltd, பதிவு அலுவலகம், SF#124/19, வடக்கிபாளையம் மெயின் ரோடு, C கோபாலபுரம் பிரிவு, R பொன்னபுரம், பொள்ளாச்சி - 642 002 **தொழிற்சாலை முகவரி,** SF#345/3, சாரைபதி ரோடு, வேட்டைகாரன்புதூர், பொள்ளாச்சி - 642 129 **ஜாமீன்தாரர் / இயக்குனர்: 2.Mr.R.மகேந்திரன், ஜாமீன்தாரர் / இயக்குனர் / அடமானதாரர்: 3.Mrs.அபிராமி மகேந்திரன், இருவரது குடியிருப்பு முகவரி,** 128/1, வடக்கிபாளையம் மெயின் ரோடு, C கோபாலபுரம் பிரிவு, R பொன்னபுரம், பொள்ளாச்சி தாலுகா, கோயம்புத்தூர்-642 002; கடன் நிலுவைத்தொகை: **22.11.2026** அன்றுள்ளபடி ₹ **2,06,97,749/-** (ரூபாய் இரண்டு கோடியே ஆறு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்பது மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்துக்கள் விபரம்

சொத்து ID: IOBA1535EXPOVAN in BAANKNET portal

ஜட்டம் எண்.1: கோயம்புத்தூர் தெற்கு பதிவு மாவட்டம், ஆனைமலை சார்-பதிவு மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் தெற்கு எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.174, **ஆனைமலை கிராமம், முன்னார் பொள்ளாச்சி தாலுகா, தற்போது ஆனைமலை தாலுகா** என்னும் முகவரியில் **ஏக்கர் 1.07 சென்ட் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: பழைய சர்வே எண்.266 & சர்வே எண்.173-ல் உள்ள நிலம், தெற்கு: சர்வே எண்.175/2-ல் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.266-ல் உள்ள நிலம், மேற்கு: சர்வே எண்.173-ல் உள்ள நிலம்.

ஜட்டம் எண்.1: கோயம்புத்தூர் தெற்கு பதிவு மாவட்டம், ஆனைமலை சார்-பதிவு மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் தெற்கு எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.175, பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.175/1, **ஆனைமலை கிராமம், முன்னார் பொள்ளாச்சி தாலுகா, தற்போது ஆனைமலை தாலுகா** என்னும் முகவரியில் **ஏக்கர் 0.67 சென்ட் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.174-ல் உள்ள நிலம், தெற்கு: திருமலைசாமி-க்கு சொந்தமான நிலம், கிழக்கு: ஆழியாறு, மேற்கு: திருமலைசாமி-க்கு சொந்தமான நிலம்.

மொத்த பரப்பு: 1.07+0.67=1.74 ஏக்கர் (174 சென்ட்.). மேற்கூறிய சொத்து, ஆனைமலை சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திர ஆவண எண்.646/2021-ன் கீழ் துல்லியமாக உள்ளது.

சிறப்புக் குறிப்பு: இந்தச் சொத்து, ஆனைமலை கிராமத்தில் உள்ள சர்வே எண் 175/2 மற்றும் 177/A (மொத்தப் பரப்பு 4.30 நஞ்சை ஏக்கர்) ஆகியவற்றில் அமைந்துள்ள மற்றொரு சொத்துடன் இணைந்தே ஏலத்திற்கு விடப்பட வேண்டும். அதாவது, 'IOBA1535INDIANVANILA' மற்றும் 'IOBA1535EXPOVAN' ஆகிய சொத்து அடையாளங்கள் (Property IDs) கொண்ட சொத்துக்கள் அருகருகே அமைந்துள்ளன. இவை இரண்டையும் ஒன்றாக ஏலம் எடுப்பதன் மூலமே இரண்டு சொத்துக்களுக்கும் சாலை வசதி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. எனவே, 'IOBA1535INDIANVANILA' அல்லது 'IOBA1535EXPOVAN' ஆகிய சொத்துக்களுக்குத் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படும் ஏல விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.

ரிசர்வ் விலை ₹ 1,17,45,000/- EMD ₹ 11,74,500/- ஏல உயர்வுத்தொகை ₹ 1,00,000/-

வ.எண்.2: கடன்தாரர் பெயர்: 1.M/s.இந்தியன் வெண்ணிலா எண்டர்பிரைசஸ், SF எண்.135/2C, வடக்கிபாளையம் ரோடு, R பொன்னபுரம் அஞ்சல், பொள்ளாச்சி தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம்-642 002, மேலும் முகவரி: எண்.15, காமராஜர் ரோடு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்-642 002, **இயக்குனர்/உரிமையாளர்: 2.Mr.R.மகேந்திரன், ஜாமீன்தாரர்/இயக்குனர்/அடமானதாரர்: 3.Mrs.அபிராமி மகேந்திரன், இருவரது முகவரி:** 128/1, வடக்கிபாளையம் மெயின் ரோடு, C கோபாலபுரம் பிரிவு, R பொன்னபுரம், பொள்ளாச்சி தாலுகா, கோயம்புத்தூர்-642 002.; கடன் நிலுவைத்தொகை: **22.11.2026** அன்றுள்ளபடி ₹ **12,83,62,356/-** (ரூபாய் பன்னிரண்டு கோடியே எண்பத்து மூன்று லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து முன்னூற்று ஐம்பத்தாறு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம்

Property ID: IOBA1535INDIANVANILA in BAANKNET portal. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **முன்னதாக பொள்ளாச்சி தாலுகா, தற்போது ஆனைமலை தாலுகா, ஆனைமலை கிராமத்தில்** பமையப பட்டா எண்.1316, புதிய பட்டா எண்.2662, SF எண்.175/2-ல் உள்ள நிலத்தின் மொத்த பரப்பு 2.73 ஏக்கர், நஞ்சை ஹெக்டேர் 1.10.5 மற்றும் ஆனைமலை கிராமத்தில் பட்டா எண்.1243, SF எண்.177/4-ல் உள்ள நஞ்சை ஹெக்டேர் 1.27.0 அல்லது 3.14 ஏக்கர், இதன் மத்தியில் உள்ள பரப்பு 1.57¼ ஏக்கர், **ஆக மொத்தம் 4.30¼ நஞ்சை ஏக்கர் (நஞ்சை ஹெக்டேர் 1.74.5) காலி மனை,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் அதனுடன் பொது வழிப்பாதையை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து இதர வசதிகள் உட்பட. எல்லைகள்: கிழக்கு: SF எண்.165 மற்றும் 167-ல் உள்ள நிலம், மேற்கு: SF எண்.175/2-ல் உள்ள நிலம், வடக்கு: SF எண்.177/B-ல் உள்ள பழனிச்சாமி-க்கு சொந்தமான நிலம், தெற்கு: SF எண்.167 மற்றும் 162-ல் உள்ள நிலம். **இந்த சொத்தானது Mrs.அபிராமி மகேந்திரன், W/o.R.மகேந்திரன் பெயரில் உள்ளது. இந்த சொத்தானது ஆனைமலை சார் பதிவு அலுவலகத்தின் ஆவண எண்.5468/2020-கீழ் துல்லியமாக உள்ளடங்கியது.**

சிறப்புக் குறிப்பு: இந்தச் சொத்து, ஆனைமலை கிராமத்தில் உள்ள சர்வே எண் 174 மற்றும் 175/1 ஆகியவற்றில் அமைந்துள்ள மற்றொரு சொத்துடன் (மொத்தப் பரப்பு 1.74 ஏக்கர் / 174 சென்ட்கள்) இணைந்தே ஏலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது, 'IOBA1535EXPOVAN' மற்றும் 'IOBA1535INDIANVANILA' ஆகிய சொத்து அடையாள எண்களைக் கொண்ட சொத்துகள் அருகருகே அமைந்துள்ளன. இவை இரண்டிற்கும் சாலை வசதி கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், இவை ஒன்றாகவே ஏலம் எடுக்கப்பட வேண்டும். 'IOBA1535INDIANVANILA' அல்லது 'IOBA1535EXPOVAN' ஆகிய சொத்துகளுக்குத் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படும் ஏல விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.

ரிசர்வ் விலை ₹ 2,90,41,200/- EMD ₹ 29,04,120/- ஏல உயர்வுத்தொகை ₹ 3,00,000/-

வ.எண்.3: கடன்தாரர் / அடமானதாரர் பெயர்: 1.Mrs. அபிராமி மகேந்திரன், கடன்தாரர்: 2.Mr.R.மகேந்திரன், இருவரது குடியிருப்பு முகவரி, 128/1, வடக்கிபாளையம் மெயின் ரோடு, C கோபாலபுரம் பிரிவு, R பொன்னபுரம், பொள்ளாச்சி தாலுகா, கோயம்புத்தூர்-642 002; கடன் நிலுவைத்தொகை: **22.11.2026** அன்றுள்ளபடி ₹ **4,55,62,371/-** (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்தொன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விபரம்

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட **பொள்ளாச்சி தாலுகா, கபிலிபாளையம் கிராமம்,** SF எண்.123/2-ன் மொத்த பரப்பு 1.11 ஏக்கர், இதில் பட்டா எண்.407, SF எண்.123/2A-ன் **பரப்பு 0.59 ஏக்கர்.** எல்லைகள்: தெற்கு: SF எண்.123/5-ல் உள்ள நிலம், வடக்கு: SF எண்.120-ல் உள்ள நிலம், மேற்கு: SF எண்.123/1-ல் உள்ள நிலம், கிழக்கு: சிவராஜ் மற்றும் மற்றவர்கள் சொத்து. மேலும் SF எண்.123/5-ன் மொத்த பரப்பு 3.19 ஏக்கர், இதில் **1.04 ஏக்கர்.** எல்லைகள்: தெற்கு: மேற்குறிப்பிட்டுள்ள SF எண்.123/2-ல் பரப்பு 0.59 ஏக்கர், வடக்கு: SF எண்.123/6-ல் உள்ள நிலம், கிழக்கு: தேவராஜ் சொத்து, மேற்கு: சிவராஜ் மற்றும் மற்றவர்கள் சொத்து. பாகம் பிரிக்கப்பட்ட படி சொத்தின் பாகம் பிரிக்கப்பட்ட பட்டா எண்.270, SF எண்.123/5B-ல் பரப்பு 0.58.23 ஹெக்டேர். **மொத்த பரப்பு 1.63 ஏக்கர் சொத்தானது Mrs.அபிராமி மகேந்திரன், W/o.R.மகேந்திரன் பெயரில் உள்ளது. மேற்கூறிய சொத்து, பொள்ளா